தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12161/E/2019**

திரு.S.கருப்பையா .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 19.07.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், ஆமத்தூர் கிராமத்தில் தோட்ட நிலம் சர்வே எண்.198/1 மற்றும் 198/2 தன்னுடைய பழைய பட்டா எண்.699-ல் பதிவில் இருந்ததை கடந்த UDR-ல் தவறுதலாக வேறு நபர் தவசியப்பன் பெயர் பட்டா எண்.403-ல் ஏற்பட்ட அவசியத்தை அறிந்து 02.01.2017 அன்று திருத்தம் கோரி கேட்டிருந்ததாகவும், இது சம்பந்தமாக 09.03.2017-ல் அன்று ஆஜராகி ஆவணங்களை சமர்ப்பித்தாகவும் தெரிவித்து, மேற்படி விண்ணப்ப கோரிக்கையின் தன்மையை தகவலாக வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாத காரணத்தால், மேல்முறையீட்டாளர் 25.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கும் மற்றும் 27.11.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திலும் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட

இருந்த நிலையில், விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 04.11.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளருக்கு 23.09.2020 தேதியிட்ட கடிதம் வாயிலாக அவரது மனு தொடர்பான போதிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில், அவரது கோரிக்கை தொடர்பாக மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல் அடங்கிய கடிதத்தை மேல்முறையீட்டாளர் 28.09.2020 அன்று நேரில் பெற்றுக் கொண்டு, ஏற்பளிப்பு செய்துள்ளதாக தெரிவித்து அதன் நகலை இணைத்து அனுப்பியுள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் 29.09.2020 அன்று சில ஆவணங்களை சமர்ப்பித்ததின் அடிப்படையில், 03.11.2020 அன்று மனுதாரரது கோரிக்கை தொடர்பாக விசாரணை செய்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு ஆமத்தூர் கிராம நிர்வாக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்நடவடிக்கையினை முழுமையானதொரு தகவலாக இவ்வாணையம் கருதவில்லை.

3. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், **விருதுநகர் வட்டாட்சியர் அலுவலக வட்ட துணை ஆய்வாளருடன் இணைந்து**, 19.07.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு முழுமையான தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப் பெற்ற 21 தினங்களுக்குள் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12161/E/2019</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

வட்டத் துணை ஆய்வாளர்,
நிலஅளவைப் பிரிவு,
வட்டாட்சியர் அலுவலகம்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

திரு.S.கருப்பையா த/பெ.கே.சங்கரலிங்கம் (லேட்)
4/279, சங்குரெட்டிபட்டி தெரு,
ஆமத்தூர்-626 005,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
RJ/PS 05.11.2020